ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2290/10 - 2022 ජූලි මස 25 වැනි සඳුදා - 2022.07.25
2290/10 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BER/4/5/2/75.
காணி அமைச்சின் குறிப்பு இல. : 4/3/6/2018/HW/102.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், 763, கனேகம கிராம அலுவலர் பிரிவில், கனேகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. க. 4876 எனும் முதல் படத்தில் காணித்துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள 0.0053 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய ஒரு (01) காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 01 - காணியின் பெயர் : குருனகே வத்த, காலி வீதி; விபரம்: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) உம் சீமெந்து வாய்க்காலும்; உரிமை கோருவோர்: அளுத்கமை, காலி வீதி, இல. 322 இல் வசிக்கும் வீரபுகே சந்ரசிறி பிரனான்துவும், அளுத்கமை, காலி வீதி, இல. 5/51 இல் வசிக்கும் கடுவாவல நுகன்டே கெதர விமலசேனவும் ஏனையோரும்; விஸ்தீரணம்: 2.1 பர்சஸ்.**

காணியின் எல்லைகள்:

வடக்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை), சீமெந்து வாய்க்கால், வன்னிபுரகே புஷ்பா பிரனான்து, வீரபுகே சந்ரசிறி பிரனான்து, நுகன்டே கெதர விமலசேனவும் ஏனையோரும் உரிமைகோரும் குருனகே வத்த; கிழக்கு: வீரபுகே சந்ரசிறி பிரனான்துவும் ஏனையோரும் உரிமைகோரும் குருனகே வத்த, டயிடஸ் விகுமனாயக உரிமை கோரும் மாவபொடபெல வத்த; தெற்கு: சீமெந்து வாய்க்கால், வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); மேற்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை).

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 31 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு களுத்துறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு ஒகத்து மாதம்

24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். ரன்ஜன் பீ. பெரேரா,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2022, யூலை 08.

EOG 07 - 0129

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: HRP/LND/ACQSN/12/05.
காணி அமைச்சின் இல.: 4-3/9/2014/ஐஆர்/348-ஏ.

இலக்கம் 2052/19 மற்றும் 2018.01.04 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணி எடுத்தல் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் விளக்கம் 3 ஏ பக்கத்தில் தமிழ் மொழியில் பதிவிடப்பட்ட விளம்பரத்தில் துண்டு இல. 37 இன் காணியின் விஸ்தீரணம் 0.4629 ஹெக்டயார் என்று பதியப்பட்டுள்ளதுடன் அதனுடைய விஸ்தீரணம் 0.5680 என்று சரியானதாக பதியப்பட வேண்டும் என்று நான் இத்தால் அறிவிக்கிறேன்.

எம். கே. ஜி. மொரவக,
பிரதேச செயலாளர்
ஹொரவபொதான.

பிரதேச செயலகம்,
ஹொரவபொதான,
2022, யூலை 04.

EOG 07 - 0130